சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,

திருவாரூர் - 610 001

தேதி: 20.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 47/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | திருநாவுக்கரசு |
| தந்தை பெயர் | : | வீரையன் |
| கிராமம் | : | சிராங்குடி |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | ஓட்டுனர் |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். அ.சா-1 ரவி என்பவரை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா-1 க்கும்

எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை எதுவும் நடந்ததா அவ்வாறு பிரச்சனை எங்கு நடந்தது என்றால் அ.சா-1க்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை எதுவும் நடந்ததை பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 07.08.2022 ஆம் தேதி கீழத்திருமதிகுன்னம், தைக்கால் மெயின் ரோட்டில் புதிய பாலம் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இவ்வழக்கின் எதிரிகள் மூவரையும் கைது செய்த போது நான் உடன் இருந்தேன் என்றும், அப்போது 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், நானும் விஸ்வநாதன் என்பவரும் உடன் இருந்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றும், எதிரிகள் கேட்டுக்கொண்டதால் நான் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.09.20 18:32:56 +05'30'

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.